Registered as a news paper in Ceylon.

# தொண்டன்

கத்தோலிக்க மாத ஏடு.

| மலர் 3 | மட்டக்களப்பு | மாசி — 1971 | விலை 30 | இதழ் 2 |
|---|---|---|---|---|

# வெண்ணிற ஆடையில்...!

—"அபிரான்"—

லூர்துநகர்; பிரான்சின் தென் கோடியிலுள்ள ஒரு சிறு நகரம்.

1858; பெப்ருவரி 11ம் நாள்; நடுப்பகல் நேரமிருக்கும் பெர்னதத் என்ற இளம் பெண், தன் சகோதரி மரியாளோடும், தோழி ழான் அபதியோடும் விறகு சேகரிக்க அங்கே சென்றுகொண்டிருக்கின்றாள். பதினான்கு வயது நிரம்பியவள் பெர்னதத். எழுதவோ படிக்கவோ தெரியாது. உடல் நலமில்லை. ஆஸ்மா வியாதி அவளுக்கு. மற்ற இரு பெண்களும் கட்டான உடல் உடையவர்கள். எனவே இவர்கள் இருவரும் காலணிகளைக் கழற்றிவிட்டு எவ்வித இக்கட்டும் இன்றி எளிதில் ஆற்றைக் கடந்து செல்கின்றனர். ஆற்றிலோ தண்ணீர் 'ஜில்' என்று ஓடிக்கொண்டிருக்கிறது. வியாதியால் துன்பப்படும் பெர்னதத் குளிர்ந்த நீரில் காலை வைக்கலாமா? சலதோஷம், இருமல் இவைகளுக்கு ஆளாக நேரிடுமே! அம்மா சும்மாவிடுவார்களா?



இருப்பினும் கடமை உணர்ச்சி அவளை விடவில்லை; ஆற்றினைக் கடக்கத் துணிவு பிறக்கிறது. காலணியைக் கழற்றுகிறாள். பின்பு காலுறையைக் கழற்ற ஆரம்பிக்கிறாள். அப்பொழுது.... ஒன்றும் எதிர்பாராத நேரத்திலே........

திடீரென புயற்காற்று போன்று பெரும் இரைச்சல். திடுக்கிடுகின்றாள்; அங்கும் இங்கும் பார்வையை அலையவிடுகின்றாள்: ஒருபக்கம் கேவ் ஆறு; மறுபக்கம் செங்குத்தான மசபியேல் பாறை; இரண்டிற்கும் இடையே இளநங்கை பெர்னதத். காற்று சுழன்று சுழன்று வீசிக்கொண்டே இருக்கிறது.

[3ம் பக்கம் பார்க்கவும்]

"திருச்சட்டத்தை அழிக்கவல்ல...... நிறைவேற்றவே வந்தேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இறைவழிபாட்டுச் சிந்தனைகள்

## (22) தொடக்கத் திருவருட் சாதனங்களும் பாஸ்கா மறைபொருளும்

### (துணை ஆயர்)

கிறிஸ்தவ வாழ்வின் தொடக்கத் திருவருட்சாதனங்களின் மையப் பொருளாக விளங்குவது கிறிஸ்துவின் பாஸ்கா மறை பொருளே. ஏனெனில், இத்திருவருட்சாதனங்கள் பாஸ்கா மறைபொருளின் வல்லமையாலேயே மாந்தர்க்கு அருளை அளித்து, அவர்களைப் புனிதப்படுத்துகின்றன; மக்களைக் கிறிஸ்துவின் பாஸ்கா மறை பொருளோடு தொடர்புகொள்ளச் செய்வதையே அவை தமது நோக்கமாக கொண்டுள்ளன.

இறைவன் தமது மக்களின் மீட்புக்காகச் செய்த ஆச்சரியத்திற்குரிய செயல்களைப் பாஸ்கா பெருவிழா கொண்டாடுகின்றது. இக் கொண்டாட்டம் ஒரு நினைவுச் சின்னமாக மட்டுமன்று, உன்னத திருவருட்சாதனமாகவும் விளங்குகின்றது. ஏனெனில் புனித அகுஸ்தீனுர் கூறுவதுபோல் அது ''இறப்பிலிருந்து உயிர்ப்புக்கு இட்டுச்சொல்கிறது''. கிறிஸ்தவ மக்களது இறைவழிபாட்டின் மையமாக விளங்குவதும் அதுவே.

திருச்சபையின் முதல் நூற்ருண்டுகளில் வளர்ந்தோர் அதிகமாக மனந்திரும்பிக் கிறிஸ்து மதத்தில் சேர்ந்தபடியால், அவர்கட்கு ஞானஸ்நானம், உறுதிப்பூசுதல் என்னும் திருவருட்சாதனங்கள் சிறப்பாக பாஸ்கா திருவிழிப்பின்போதே அளிக்கப்பட்டன. புதிதாகத் திருமறையில் சேர்க்கப்பட்டவர்கள் பாஸ்கா பெருவிழாக் கொண்டாட்டத்தின் உச்சக் கட்டத்தில் நற்கருணைப்பலியில் முதல் முறையாகப் பங்குபற்றி திருவிருந்தும் அருந்தினர்.

இத்திருவருட்சாதனங்களைத் தகுதியுடன் பெறுவதற்கு, திருமறையிற் சேர விரும்பியவர்கள் நீண்டகாலமாக ஆயத்தப்படுத்தப்பட்டனர். ஆனுல், பாஸ்கா பெருவிழாவுக்கு ஆயத்தக்காலமாக அனுசரிக்கப்பட்ட 40 நாட்களில் அவர்கள் சிறப்பாக ஆயத்தப் படுத்தப்பட்டனர். இச்சிறப்பான ஆயத்தம் ஒழுக்கம், திருமறைக்கோட்பாடு, இறைவழிபாடு என்னும் மூன்று துறைகளில் நடைபெற்றது. **ஒழுக்கத் துறையில்:** அவர்கள் சாத்தானையும் அவன் கிரியைகளையும் வெறுத்துத் தள்ளிவிட்டு இறைவன் பக்கம் மனந்திருந்தியது, சட்டங்கள், நோம்புகள், ஒறுத்தல்கள் ஆகியவற்றின் அனுசரிப்பால் உறுதிப்படுத்தப்பட்டது. **திருமறைக்கோட்பாட்டுத் துறையில்:** அவர்கள் பெற்ற விசுவாசம் என்னும் கொடையை நிரந்தரமாய்க் காக்கும் பொருட்டு அவர்கட்கு திருமறைக் கோட்பாடுகளின் தெளிவான விளக்கம் அளிக்கப்பட்டது. **இறைவழிபாட்டுத் துறையில்:** ஈடேற்றம் என்னும் மாபெருங் கொடையை இறைவன் திருச்சபை வழியாகவே அவர்கட்கு அளிக்கிருர் என்ற உண்மை, செபங்கள் வழிபாட்டுச் சடங்குகள், திருவருட்சாதனங்கள் பற்றிய விளக்கங்கள் என்பனவற்ருல் வலியுறுத்தப்பட்டது. புதுக் கிறிஸ்தவர்களுக்குரிய மேற்கூறிய ஆயத்தத்தை 3ம் நூற்ருண்டின் தொடக்கத்தில் கிப்போளிற்றஸ் என்பவரால் உரோமாபுரியில் இயற்றப்பெற்ற **''அப்போஸ்தலர் பாரம்பரியம்''** என்னும் நூல் தெளிவாக விவரிக்கின்றது.

நம் நாட்களிலும் வளர்ந்த புதுக்கிறிஸ்தவர்கள் நன்ருக ஆயத்தப்படுத்தப்பட வேண்டுமென்று திருச்சபை விரும்புகின்றது. இதைச் சரிவரச் செய்து முடிப்பதற்கு ஞானஸ்நானம், உறுதிப்பூசுதல், தேவநற்கருணை ஆகிய மூன்று தொடக்கத் திருவருட்சாதனங்களுக்கும் அடிப்படையாயுள்ள இறையியல் கொள்கையையும், அவற்றிற்குரிய திருச்சடங்குகளின் கருத்துக்களையும் நன்ருக அறிந்திருத்தல் அவசியம். இவை யாவும் விளங்கிக்கொள்வதற்கு பாஸ்கா பெருவிழாக் கொண்டாட்டத்தின் திருச்சடங்குகள் துணை புரிகின்றன. பெரிய சனிக்கிழமை இரவு கிறிஸ்துவின் பத்தினியாகிய திருச்சபை

[7ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வெண்ணிற......

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அமைதியான நேரத்தில் இப்படி ஒரு புயலை அவள் எதிர்பார்க்கவில்லை. வெளியிலும் புயல்; உள்ளத்திலும் புயல். அந்த நேரத்தில் 'சலசல' வென்று எழுந்த ஒலி நங்கையின் கவனத்தைக் கவர்கிறது. ஒலி எழுந்த இடத்தை உற்றுப்பார்க்கிருள். அங்கே....

மசபியேல் பாறையிலே ஒரு குகை, அதற்கு மேலே இயற்கையாக அமைந்த ஒரு மாடம். குகைக்கருகில் இருந்த செடி ஆடிய போது எழுந்த ஒலிதான் அது. இக்குகையின் முன் அழகான பொன்னிற மேகம் ஒன்று படர்கிறது. பெர்னதத் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருக்கிருள். தன் கண்ணெதிரே .... .... அங்கே .... .... வெண்ணிற ஆடையிலே, அழகே உருவாக, இளமையும் எழிலும் மிளிர ஓர் ஆரணங்கு தோன்றுகிருள்; பதினறு அல்லது பதினேழு வயது மதிப்பிடக்கூடிய மங்கை, இதுவரையில் இவ்வளவு அழகுள்ளவளை யாரும் கண்டிருக்க முடியாது. தலையிலே வெண்முக்காடு; நீண்ட வெண்ணுடை அணிந்திருக்கிருள்; அது மலரன்ன பாதங்களைத் தொட்டுக் கொண்டிருக்கிறது, இடையிலே நீலக்கச்சை; அவளது வலது கரத்திலே பொன்னிறக் கம்பியால் கோர்க்கப்பட்ட வெண்ணிற மணிகள் நிறைந்த செபமாலை தவழ்ந்து கொண்டிருக்கிறது. அழகிய அவளின் பாதங்களை இரு ரோஜா மலர்கள் மேலும் அழகு செய்கின்றன. புதுமைப் பெண் புன்னகை பூத்த வண்ணம் பெர்னதத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிருள்.

முழந்தாளிடுகின்ருள் பெர்னதத். தோன்றிய ஆரணங்கு சிலுவையடையாளம் வரைய அவளும் வரைந்து கொள்கிருள். செபமாலை சொல்ல ஆரம்பிக்கின்ருள். ஆரணங்கும் செபமாலையை கரத்தினில் எடுக்கின்ருள். ஒவ்வொரு பத்துமணி செபத்திற்குப் பின்னும் தமதிரித்துவ தோத்திரத்தை உரத்த குரலில் பெர்னதத்தோடு சொல்கிருள். இறுதியில், தோன்றிய ஆரணங்கு புன்னகை புரிந்து இளம் பெண்ணை வாழ்த்தி மறைகின்ருள். பொன்னிற மேகமும் மறைகிறது.

பெர்னதத்திற்கு தெளிவாக தெரிந்திருந்தாலும் ''தோன்றிய உருவம் மாயத் தோற்றமாக இருக்கக் கூடுமோ!'' என்று பிறர் சொல்ல, ஐயமுற்ருள். மூன்று நாட்களுக்குப் பின் இரண்டாம் முறையாக கெபிக்கு சென்ற பொழுது கரங்களில் தீர்த்தத்தைக் கொண்டு சென்ருள். காட்சி தந்த கன்னிமேல் அதைத் தெளித்தாள். கன்னி புன்னகை செய்தபடி நின்று கொண்டிருந்தாள். மாயத்தோற்றமல்ல; உண்மையான உருவமே என நம்பிஞள்.

முதல் காட்சிக்குப் பின் பெர்னதத் தன் நண்பர்களோடும் உறவினர்களோடும், மற்ற ஜனங்களோடும் குகைக்கு வந்தாள். அன்னை 18 முறை காட்சி தந்தாள். இறுதிக் காட்சி 1858 ஜுலை 16ம் நாளாகும். இக்காட்சிகளெல்லாம் பெர்னதத்திற்கு மட்டுமே தெரிந்தன. மற்றவர்கள் ஒன்றும் காணவில்லை. ஆனல் வந்த அனைவரின் இதயங்களும் மகிழ்வால் நிறைந்திருந்தன. அன்னை அறிமுகமானவர்களைப் போல ஒவ்வொருவரையும் உற்று நோக்கியதாக பெர்னதத் சொல்கிருள். அன்னை பாவிகளுக்காக வேண்டிக்கொள்ள கேட்டுக்கொண்டாள்.

நலமின்றி இருந்த இளநங்கை பெர்னதத் ஒவ்வொரு காட்சியின் பொழுதும் அன்னையின்பால் உறுதியும் துணிவும் பெற்ருள். 'தவம், தவம், தவம்' என்ற அன்னையின் வார்த்தைகளை அடிக்கடி சொல்வாள். காட்சிகளின் பொழுது வழக்கமாகத் தன்னிலை இழந்து பரவசமாவாள். முகச் சாயல் அப்பொழுது மாறுபட்டிருக்கும். தெய்வீக ஒளி படரும். இப்படி ஏற்பட்ட ஒரு சமயத்தில் பெர்னதத்தின் தாய், ''ஆண்டவரே! என் மகளை என்னிடமிருந்து எடுத்துக்கொள்ள வேண்டாம்'' எனக் கதறிஞள்.

பலர் இக்காட்சிகள் எல்லாம் உண்மையல்லவென்றும், இதைப் பரவ விடக் கூடாதென்றும் விரும்பினர். எனவே, பெப்ருவரி 21ம் தேதியே பெர்னதத் காவலர்களால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டாள். காட்சிகளெல்லாம் உண்மையல்லவென்று ஒத்துக் கொள்ளாவிட்டால் கொடிய தண்டனை கிடைக்கும் என்று அவளையும், அவளது பெற்ருேர்களையும் பயமுறுத்தினர். வசைகூறி நிந்தித்தனர். பெண்தான் பெர்னதத்; இயற்கையில் பயந்த சுபாவம் உடையவள்தான்; ஆனல் பார்த்ததை பார்க்கவில்லை என்று மனச் சான்றுக்கு விரோதமாக அவள் கூறவில்லை. பயமுறுத்தினர்; பயனில்லை. பணம் கொடுத்துப் பார்த்தனர்; பயனில்லை

ஏதாவது வியாதியின் காரணமாக இப்படிச் சொல்கிருள் என்ருே, தற்புகழுக்காகக் கூறுகிருள் என்ருே அவளைச் சோதித்தவர்களில் ஒருவரும் சொல்லவில்லை. காட்சிகள் எல்லாம் முடியுமுன்பே மார்ச் 27ம் தேதி

[4ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வெண்ணிற...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

மூன்று மருத்துவர்கள் நியமிக்கப்பட்டனர். அவளது உடல் நிலையைச் சோதித்துப் பார்த்தனர். அவர்கள் அளித்த அறிக்கை இன்னும் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அதிலே பெர்னதத் தான் கண்ட காட்சிகளைத் தொகுத்துரைத்திருக்கின்றாள். இவ்வறிக்கையும், பல ஆண்டுகளுக்குப் பின் அவள் உரைத்த நிகழ்ச்சிகளின் விளக்கமும் முரண்பாடின்றி ஒன்றுக்கொன்று ஒத்திருப்பது குறிப்பிடத்தக்கது. மனப்பிரேமை இதற்குக் காரணமாக இருக்கலாமா என்று சோதித்துப் பார்த்ததில் அப்படியொன்றும் புலப்படவில்லை.

பெப்ருவரி 18ம் நாள் தூய கன்னிமரி அப்பெண்ணிடம் சொன்னதாவது: ''பதினைந்து நாட்கள் தினமும் தயவு செய்து நீ இங்கு வருவாயா? இவ்வுலகில் அல்ல; ஆனால் மறுவுலகில் உன்னைப் பேறுபெற்றவளாக்க வாக்குறுதி அளிக்கிறேன்.'' ''பலர் வர வேண்டுமென விரும்புகிறேன்.'' கன்னிமரி பதினைந்து நாள் இடைவெளியில் சொன்னதாவது: ''நீ பாவிகளுக்காக செபிக்க வேண்டும்.'' ''பாவிகளுக்காகத் தரையை முத்தமிட வேண்டும்.'' ''தவம், தவம், தவம்.'' ''ஆலயம் ஒன்றை எழுப்ப வேண்டுமென குருக்களிடம் சொல்.'' ''இவண் மக்கள் ஊர்வலமாக வரவேண்டுமென விரும்புகிறேன்.'' ''அந்த ஊற்று நீரிடத்தில் சென்று அதைப் பருகு'' ''உன்னையே அதில் கழுவு.'' ''அங்கே சென்று அந்தப் புல்லை உண்பாய்'' மார்ச் 25ம் நாள் கன்னிமரி சொன்னதாவது: ''**நாமே அமல உற்பவம்**''

இதில் குறிப்பிடத்தக்கது என்னவென்றால், காட்சிகள் எல்லாம் பெர்னதத் விரும்பும் பொழுது கிடைக்கவில்லை. நினைவுச் சின்னத்தில் காணப்படுவதுபோல, இரு நாட்கள் அவள் காட்சிகளைக் காணவில்லை: பெப்ருவரி 22ம் தேதி; மார்ச் 3ம் தேதி. அப்பொழுது ஏராளமான சனங்களோடு குகைக்கு வந்திருந்தாள் பெர்னதத். ஓர் இரவு முழுவதும் அநேகர் காத்திருந்தனர். இப்படி அன்னை காட்சி தராமல் இருந்ததற்கு காரணம் உண்டு என்று ஒரு சிலர் கூறுகின்றனர்: ''பெர்னதத் வேண்டுமென்றே காட்சிகளைக் கண்டதாகப் பொய் சொல்லியிருந்தால், நேற்றுபோல் இன்றும் காட்சி கண்டதாக சொல்லியிருக்க மாட்டாளா?''

இக்காட்சிகளின் உண்மையினை உலகுக்கு உணர்த்தும் பொருட்டு என்றும் நிலைத்திருக்கக் கூடிய நினைவுச் சின்னமாக விளங்குவது புதுமை நலன் தரும் புண்ணிய நீரூற்றாகும். பாரின் எல்லா பாகங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்களை இது கொண்டு வருகிறது.

பெப்ருவரி 25ம் நாள். அன்னை எட்டாவது முறையாக காட்சி தரும் நேரம், 400 அல்லது 500 சனங்கள் கூடியிருக்கின்றனர். பெர்னதத் எழுகின்றாள்; குகையை நோக்கிச் செல்கின்றாள்; திரும்பி வருகின்றாள்; இவ்வாறு போவதும் வருவதுமாக இருக்கின்றாள்; தடுமாற்றத்தின் குறிகள் காணப்படுகின்றன. இறுதியாக அவள் குனிகிறாள்; தனது கரங்களால் பூமியைத் தோண்டுகிறாள்; மண்ணும் நீரும் கலந்த சேறு உண்டாகிறது; அந்த நீரையே அள்ளிக் குடிக்கிறாள். முகத்திலே தெளித்துக் கொள்கிறாள்; அங்கே வளர்ந்திருக்கும் புற்களில் கொஞ்சம் எடுத்து உண்கிறாள். இவைகளைப் பார்த்தவர்கள் ''பெர்னதத் அறிவை இழந்து விட்டாள், அவளுக்கு பைத்தியம் பிடித்து விட்டது'' என்றே எண்ணினர்.

காட்சி தந்த கன்னி பணித்த படியே தான் செய்ததாக பிறகு சனங்களுக்கு விளக்கினாள். ''ஊற்று நீரைக் குடி'' என்று அன்னை பணித்தாளாம். ஊற்று அங்கே இருந்தால் தானே! பெர்னதத் கேவ் ஆற்றிற்குச் சென்றிருக்கிறாள். அன்னை கூப்பிட்டு தரையைத் தோண்ட சொன்னார்களாம். பெர்னதத்தின் தடுமாற்றத்திற்குக் காரணம் இது தான். இதற்கு முன் இப்படிப்பட்ட ஊற்று இருக்கவில்லை என லூர்து நகர் மக்கள் நன்கு அறிவார்கள். மறுநாள் விரல் அளவுக்கு பெரிதான நீரூற்று, சின்னாட்களுக்குப் பின் குழந்தையின் கையளவுக்கு பெரிதாகி, இன்று ஆறாகப் பெருகி ஓடுகிறது. அன்றிலிருந்து இன்று வரை ஒவ்வொரு நாளும் சுமார் 27000 கலன் தண்ணீர் அவ்வூற்றிலிருந்து வெளி வருகிறது. இந்த நீர்தான் புதுமை நலன் தரும் புண்ணிய, புனித நீராகும். லூர்து நகர் தீர்த்தமாகும்.

விசாரணைக் குழு ஒன்று அளித்த அறிக்கையின் பேரில் 1862, சனவரியில், தார்பு ஆயர் ஓர் அறிக்கையை வெளியிட்டார்: ''அமல உற்பவ மரியாள் இறைவனின் அன்னை, 1858 பெப்ருவரி 11ம் நாளும், அதன் பின் 17 முறையும், லூர்து நகருக்கருகில் உள்ள மசபியேல் குகையில் உண்மையாகவே காட்சியளித்தாள். காட்சிகளில் உண்மை என்று சொல்லக்கூடிய குணங்

[5ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வெண்ணிற...

[4ம் பக்கத் தொடர்ச்சி]

கள் எல்லாம் இருக்கின்றன. விசுவாசிகள் இதை உண்மை என்று நம்பலாம்.''

திருச்சபை இதைப்பற்றி வெளிப்படையான தீர்ப்பு ஒன்றும் அளிக்கவில்லை. என்றாலும், ஆதரவு தந்து வந்திருக்கிறது. திருத்தந்தையர்களில் 9ம் பத்திநாதர், 10ம் பத்திநாதர், 11ம் பத்திநாதர், 12ம் பத்திநாதர், லூர்து அன்னையின் பக்திக்கு ஆதரவளித்து அவனியில் அன்னையின் பக்தியைப் பரப்பினர். பதின்மூன்றும் சிங்கராயர் அன்னையின் திருநாளை பிரான்சு நாட்டில் கொண்டாட அனுமதியளித்தார்; 1907 பெப்ருவரி 11ம் நாள், பத்தாம் பத்திநாதர், ''திருச்சபை எங்கும் அன்னையின் திருநாளைக் கொண்டாட வேண்டும்'' என்றார்.

அன்று காட்சி தந்தது முதல் இன்று வரை லூர்து நகரில் அன்னை எண்ணற்ற புதுமைகளைப் புரிந்து வருகின்றாள். ஆன்ம பிணியுள்ளோரும், உடலில் பிணியுள்ளோரும் அற்புதமாகக் குணம் பெறுகின்றனர். மருத்துவர்களால் கைவிடப்பட்டவர்கள் மாதாவின் கரத்தால் சுகம் பெறுகின்றனர். இவர்களைப் பரிசோதிக்க மருத்துவ பரிசோதனை அலுவலகமும் உள்ளது. இதில் மறை, இன வேறுபாடின்றி மருத்துவர்கள் உள்ளனர். ஆத்திகர்களும், நாத்திகர்களும் உள்ளனர். ஒரு சிலர் மனந்திரும்புகின்றனர். குணமாவதற்கு முன்னும், பின்னும் இவர்கள் சோதித்துப் பார்த்து உண்மையை வெளியிடுகிறார்கள். அவரவர்களின் விசுவாசத்திற்கு தகுந்தாற்போல புதுமைகள் நடைபெறுகின்றன.

அற்புத ஊற்று வாழ்வளிக்கும் வற்றாத ஊற்றாக பெருகி ஓடிக்கொண்டிருக்கிறது. யாத்திரிகள் குளிக்க குளியல் அறைகள் இருக்கின்றன. பிணியாளர்கள் குளிப்பதற்குத் தொட்டிகளும் கட்டப்பட்டுள்ளன.

அமைதி இழந்தோர்க்கும், துன்பப்படுவோர்க்கும் அன்னை அன்பையும், அமைதியையும், ஆறுதலையும் அளிக்கின்றாள். ஒவ்வொரு ஆண்டும் பத்து இலட்சம் யாத்திரிகர்களுக்கு மேல் அன்னையிடம் ஓடி வருகின்றனர். அன்னையின் பெருந் திருநாட்களில் இலட்சம் மக்களுக்குமேல் கலந்து கொள்கிறார்கள்.

தினமும் மாலையில் நான்கு மணியளவில் மக்கள் புடைசூழ நற்கருணை நாதர் பவனி வருகின்றார். பிணியாளர்கள் கட்டிலில் படுத்திருக்கிறார்கள். நற்கருணை நாதர் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்துச் செல்கின்றார். இந்நிகழ்ச்சி அன்று இறைவன் இயேசு யூதேயாவில் நடந்து சென்றதையும், மக்கள் கூட்டம் அவரைப் பின் தொடர்ந்ததையும், பற்பல பிணியாளர்களைத் தொட்டு அவர் குணமாக்கியதையும் நம் கண்முன் கொண்டு வருகிறது. மாலை 7 மணிக்கு மக்கள் ஏற்றிய வத்திகளை கரங்களில் பிடித்துக் கொண்டும் செபித்துக் கொண்டும், ''ஆவே மாரிஸ் ஸ்தெல்லா'' என்ற பாடலைப் பாடிக் கொண்டும் ஊர்வலம் வருகின்றனர். இதற்கு 'ஒளி ஊர்வலம்' என்று பெயர்.

உலகின் உயர்ந்த திருத்தலங்களில் லூர்து நகரும் ஒன்றாகும். உயர்ந்த மலைகளுக்கும், வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் கேவ் ஆற்றுக்கும் இடையே மக்கள் அமைதியையும், மகிழ்வையும், மன நிறைவையும் காண்கின்றனர். நாமும் அங்கு சென்றால் இதையே உணரலாம். மாதாவின் மேல் முழு நம்பிக்கையோடு செல்ல வேண்டும்.

இன்று அன்னையின் பக்தி எங்கும் பரவியுள்ளது. லூர்து அன்னையின் பெயரால் எழுந்திருக்கும் ஆலயங்கள் எத்தனை! திருத்தலங்கள் எத்தனை!! செபிகள் எத்தனை!!! அன்னையின் பெயரைத் தாங்கியவர்கள் எத்தனை பேர்!!!! ★


### தொண்டன்

| | | |
|---|---|---|
| வருட சந்தா | (தபாற் செலவு உட்பட) | 4-00 |
| 6 மாதங்களுக்கு | (தபாற் செலவு உட்பட) | 2-00 |
| தனிப்பிரதி | ( ,, ,, ,, ) | -30 |

**விளம்பர விகிதம்**

(ஒருமுறை பிரசுரிப்பதற்கு)

| | | |
|---|---|---|
| 3 × 4 | அங்குலம் | ரூ. 10/- |
| 3 × 6 | ,, | ரூ. 15/- |
| 4 × 6 | ,, | ரூ. 20/- |
| 5 × 6 | ,, | ரூ. 25/- |
| 6 × 6 | ,, | ரூ. 30/- |
| 7 × 6 | ,, | ரூ. 35/- |
| 7 × 7 | ,, | ரூ. 40/- |
| 8 × 7 | ,, | ரூ. 45/- |
| 9 × 7 | ,, | ரூ. 50/- |

சந்தாக்களையும், விளம்பரங்களையும் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**தொண்டன் நிர்வாகி,**
ஆயர் இல்லம், மட்டக்களப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கிறிஸ்தவ வாழ்வு

## 4. பொறுமை என்றதோர் புயலினிலே...!

மலர்விழி கொண்டுவந்து கொடுத்த கோப்பி எப்படி இனித்ததோ, அதே போல் அவளுக்குச் சொல்லப் போகும் எண்ணங்களின் கருத்துக்களும் என் உள்ளத்தில் இனித்துக் கொண்டிருந்தன. நான் சொல்லப் போகும் கருத்துக்களில் உள்ள உண்மைகளை, அவளைப்போல் எத்தனைபேர் ஏற்றுக்கொள்ளப் போகிறார்களோ தெரியாது, ஆனால் ஏற்றுக் கொண்டு வாழப்போகும் என் மலர்விழியின் வாழ்க்கை எப்படியோ வளம் பெறப் போவது மாத்திரம் உண்மை.

'என்னப்பா கோப்பியை மறந்து சிந்தனையில் இறங்கி விட்டீர்கள். கோப்பி ஆறிவிடப் போகிறது. தயவு செய்து குடியுங்கள்' என்று நினைவு படுத்தினாள் என் மலர்விழி.

'இல்லை மலர் விழி, நான் சொல்லப் போகின்றவைகளை உன்னைப்போல் எல்லாப் பிள்ளைகளும் ஏற்றுக் கொண்டு வாழ்ந்தால் எவ்வளவு நன்றாய் இருக்கும் என்று சிந்தித்தேன், கோப்பியே மறந்துபோய் விட்டது, என்று என் மனதில் பட்டதை அவளிடம் கூறினேன்.

'என் கோப்பியையே மறந்து விடும் அளவுக்கு உங்கள் எண்ணங்கள் உங்களை ஆட்கொண்டுவிட்டதென்றால், அவ்வெண்ணங்கள் உண்மையில் உயர்ந்தவையாகத்தான் இருக்க வேண்டும் எங்கே சொல்லுங்கள் பார்ப்போம்' என்று கூறி நாற்காலியை இழுத்து என் பக்கத்தே போட்டு அமர்ந்தாள்.

''மலர்விழி! நாங்கள் குடும்பத்தில் எத்தனை பேர்?''

''மூன்று''

''எங்களுடைய வீட்டின் பெறுமதி என்ன?''

''நாற்பதாயிரம் என்று சொன்னதாக ஞாபகம்.''

' நாற்பத்தையாயிரம் என்று திருத்திக் கொள். அதாவது நாங்கள் மூவர் இருப்பதற்காக நான் செலவு செய்த தொகை நாற்பத்தையாயிரம். அதனால் விளைந்த பலன் இந்த வீடு. இதில் படுக்கை அறைகள் இரண்டு, ஒரு வாசிக அறை, ஒரு சாப்பாட்டறை, நண்பர்கள் வந்து பேசிச் செல்வதற்கு ஒரு இடம், இப்படியாக நாங்கள் வாழ்வதற்கு ஒரு 'மாளிகை' அமைத்திருக்கிறோம். இப்படி வாழ்வது ஒரு குபேர வாழ்கை' என்று நாங்கள் நினைப்பதும் இல்லை, மற்றவர்கள் நினைப்பதும் இல்லை. அதிகம் சொல்வான் ஏன்? உன் சித்தப்பா இருக்கிறார் மரியான்தம்பி; அவருடைய வீடுகள் எத்தனை? மூன்று. ஆனால் அவருக்கு இருக்கும் பிள்ளைகளின் தொகை இரண்டு; ரஞ்சனும், ராணியும்.

மலர்விழி! குருமார் ஒரு பெரிய வசதியுள்ள வீட்டைக் கட்டி விட்டார்கள் என்று மாத்திரம் நாங்கள் வாய் கூசாமல் எல்லாரிடமும் வீண் வதந்தி பரப்புகிறோம். ஆனால் எங்களில் பலர் அவர்களைவிட வசதியுள்ள வீடுகளிலும், மாடி வீடுகளிலும் எவ்வளவு சொகுசாக வாழ்கிறோம் என்பதை மறந்து விடுகிறோம். பிறர் முதுகில் இருக்கும் தூசி எங்கள் கண்களுக்குத் தெரிகிறது ஆனால், எங்கள் கண்ணில் உள்ள பொருக்கு எங்களுக்குத் தெரிவதில்லை. இதைத்தான் பொறாமை என்பது. நாம் வாழப் பிறர் வாழ வேண்டும் என்று நினைப்பது பிறர் நலச் சிந்தை, 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பது போல்; அல்லது கிறிஸ்து கூறியிருப்பதுபோல் 'உன்னைப்போல் உன் அயலானையும் நேசி' என்றது போல். இதைவிட்டு வயிற்றெரிச்சல் பட்டு மற்றவர்களை வைது வாழும் வாழ்க்கை ஒரு நாளும் செழிக்காது, மலர்விழி! இதை நீ

### தேவப்பிரியன்

இளமையிலேயே உணர்ந்து வாழ்வது மிகவும் நன்று. பழமொழி ஆகமம் கூறுவதுபோல், 'சிலர் தங்களுக்குச் சொந்தமல்லாதவைகளை அபகரித்து எப்போதுமே எளிமையிலிருக்கிறார்கள்.'

குருமார் இவ்வீடு கட்டுவதற்கு முன் எப்படியான வீட்டில் வாழ்ந்தார்கள் என்று நாம் யாராவது பார்த்தோமா? அல்லது கேட்டோமா? அல்லது அவர்கள் வாழ்க்கையை உயர்த்தத்தான் முயற்சி எடுத்தோமா? அல்லது இந்த வீட்டையாவது கட்டுவதற்கு உதவி

[7ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## இறைவழிபாட்டுச்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

விழித்திருந்து, நம் மீட்பின் மறைபொருளை நினைவுகூர்ந்து, கிறிஸ்து பாவத்தின்மேலும் சாவின்மேலும் கொண்ட வெற்றியில் நம்பிக்கை வைத்து, கிறிஸ்தவர்கள் புது வாழ்வைப் பெற்றதைக் குறித்து ஆனந்த அக்களிப்புக் கொள்வதுடன், ஆயத்தக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருளின் பயனை அடையும்படி அவர்களை வழிநடத்துகின்றது. இத் திருவிழிப்பின்போது வாசிக்கப்படும் இறைநூல் வாசகங்கள் யாவும் ஆயத்தக் கிறிஸ்தவர்கட்கு அறிவூட்டும் நோக்குடனேயே தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. ஞானஸ்நானத் தண்ணீரை மந்திரிக்கும் சடங்கின்போது, பாவத்தைக் கழுவும் ஆற்றல் தண்ணீருக்கு உயிர்த்தெழுந்த கிறிஸ்து அனுப்பும் பரிசுத்த ஆவியிடமிருந்தே வருகின்றதென்பதைக் காட்டும் பொருட்டு, தண்ணீர்மேல் ஊதியபின் பாஸ்கா மெழுகுதிரி அதில் அமிழ்த்தப்படுகின்றது. அவ்வேளை பின்வரும் வார்த்தைகள் பாடப்படுகின்றன. ''இந்தத் தொட்டியிலுள்ள நீர் முழுவதிலும் பரிசுத்த ஆவியின் வல்லமை இறங்குவதாக; இந்த நீரின் பொருள் முழுவதிலும் புதுப் பிறப்பளிக்கும் சக்தி இருக்கச் செய்வதாக''. அதன்பின் ஆயத்தக் கிறிஸ்தவர்களுக்காக பின்வரும் அழகான செபம் சொல்லப்படுகின்றது. ''எல்லாம்வல்ல நித்திய சர்வேசுரா, புதுப் பிறப்பு அடையும் மக்களின் பக்தியைத் தயவுடன் கண்ணோக்கியருளும். இவர்கள் கலைமான்போல உமது நீரூற்றை நாடி வருகிறார்கள். விசுவாசத்தின்மீது தாகங்கொண்ட இவர்களுடைய ஆன்மாவையும் உடலையும் ஞானஸ்நானத்தை திருச்சடங்கினால் அர்ச்சிக்கும்படி தயவுடன் அருள்கூரும்'' ஆமென்.

''ஞானஸ்நானம் தன்னிலே ஒரு தொடக்கமும் முதற்செயலும் மட்டுமேயாகும். ஏனெனில்,வாழ்வின் நிறைவைக் கிறிஸ்துவில் அடைதலையே அது முற்றிலும் நாடி நிற்கிறது. எனவே, விசுவாசத்தை முழுமையாய் அறிக்கையிடச் செய்தலும், கிறிஸ்துவின் விருப்பத்திற்கேற்றபடி அமைந்துள்ள மீட்புத் தரும் நிறுவனத்தில் முற்றும் இணையச் செய்தலும், இறுதியாக நற்கருணை ஒன்றிப்பில் முழுமையாய் நம்மைப் புகுத்தலுமே ஞானஸ்நானத்தின் நோக்கங்கள்'' (கிறிஸ்தவ ஒன்றிப்பு இ. 22). இந் நோக்கங்கள் பாஸ்கா திருவிழிப்புப்பூசையில் நிறைவேறுகின்றன.

## கிறிஸ்தவ வாழ்வு...

[5ம் பக்கத் தொடர்ச்சி]

அளித்தோமா? அப்படிச் செய்யாத நாங்கள் அவர்களுடைய வீட்டைப்பற்றி குறைபடுவது எதற்காக? மலர்விழி! நான் உன் அம்மாவைக் கலியாணம் கட்ட முன் குருமடத்தில் சேர இருந்தனன் என்பதை உன் அம்மா அடிக்கடி கூறியிருக்கிறாள். அந்த நாட்களில் நான் அவர்களுடைய தனி வாழ்க்கையில் அதிகம் அக்கறை எடுத்தனன்; அப்பொழுது அவர்கள் வாழ்ந்த 'வீடு' இன்று மோட்டார் வண்டிகள் நிறுத்தும் இடமாகப் பாவிக்கப்பட்டு வருகிறது. அந்த நாட்களில் யாராவது குருமார் வெளியிடங்களில் இருந்து வந்தால் தங்கிச் செல்வதற்கு ஒரு நல்லிடம் இல்லை. இன்று அவர்கள் மதிப்புடன் யாரையும் வரவேற்க முடியும். இது எங்களுக்கு பெருமையைத் தரவேண்டுமே அன்றி, பொறாமையை வளர்க்கக் கூடாது,

ஆம், அப்பா, நீங்கள் கூறுவது முற்றும் உண்மை. நீங்கள் அடிக்கடி கூறுவதுபோல் 'தோளுக்குமேல் தலை இருந்தால்' நாம் இந்த உண்மைகளை உணர்ந்து கொள்வோம். அல்லது யார் யாரைப் பற்றி நாம் அறிய விரும்புகிறோமோ, அவர்களுடன் நெருங்கிப் பழகினால் இவைகளைப் புரிந்து கொள்வோம். என் தோழி அரிய மலர் குருக்களுடன் நெருங்கிப் பழகுபவள். அவள்கூட எனக்கு எத்தனையோ உண்மைகளை எடுத்துக் கூறியிருக்கிறாள். ஆனால் நான் அவைகளை அப்பொழுது நம்பவில்லை. நீங்கள் இவைகளைக் கூறியபின் சிந்தித்துப் பார்க்கையில் எவ்வளவு உண்மைகள் இருக்கின்றன என்பது தெளிவாகின்றது.

சில குருமார் பார்ப்பதற்கு வடிவாக உடுத்தினாலும், தங்கள் சொந்த வாழ்வில் தரித்திரம் தாழ்ச்சி, என்ற புண்ணியங்களின் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார்களாம். சிலர் வெளியில் கோபக்காரரர்களைப்போல் தென்பட்டாலும் அவர்களின் உள்ளம் எல்லார்க்கும் உருகுமாம். இப்படிப் பலதும் சொல்வாள்.

ஆம், மலர்விழி. வெளிக்கு எவ்வளவுக் கெவ்வளவு கோபமாகவும் மூர்க்கத்தனமாகவும் சிலர் பேசினாலும், அவர்கள் உள்ளத்தில் எப்படி இருப்பார்கள் என்பதை நாம் தீர்வையிடக் கூடாது. பிறர் பெயரைக் கெடுக்கவோ, அன்றேல் அவர்களுடைய பெயர்களுக்குக் களங்கம் உண்டாக்கக் கூடிய விதமாகப் பேசவோ எங்களுக்கு உரிமை இல்லை. பெயரின் மதிப்பையும் மாண்பையும் பற்றி நான் கூறுவதற்குமுன் நீபோய் இக் கோப்பையைக் கழுவி வைத்துவிட்டு வா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாணவர் மன்றம்

## புனித லூக்காஸ் சுவிசேசம்

### (ஊ) உவமைகள் மூலம் போதித்தல்

இறை அரசைப் பற்றித் தெளிவாகவும், நேரடியாகவும் மலைப்பிரசங்கத்தில் கூறப்பட்டிருக்கின்றது. இந்த நற்செய்தி, மக்களின் மனதில் பதிந்ததாகவோ அல்லது மனதைக் கவர்ந்ததாகவோ, இயேசுவுக்குத் தோன்றவில்லை; ஏனென்றால், இம்மக்கள் தங்களுக்கென்று, ஒரு அரசியல் மெசியாவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். இவர் மற்றெல்லா மக்களையும் அடக்கி ஆள்வாரென்றும், தங்களுக்கென ஒரு இராட்சியத்தை ஏற்படுத்துவாரென்றும் நம்பியிருந்தார்கள். ஆதலின் கிறிஸ்துவையும், அவரின் போதனைகளையும், இவர்களால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. எனவே, இறை அரசின் மறைபொருளை, **உவமைகள்** மூலம், இயேசு எடுத்துக்கூறி, மக்களுக்கு விளக்க வேண்டியிருந்தது.

உவமைகள் மூலம் கூறுவதை, சாதாரண மக்கள் இலகுவில் விளங்கிக்கொள்ளுவார்கள். இயற்கையிலிருந்தும், அன்றாட மனித வாழ்விலிருந்தும், நிகழக்கூடிய அல்லது நிகழ்ந்த சம்பவத்தை அல்லது காட்சியை, கதைமூலமாக அல்லது சில வார்த்தைகள் வாயிலாக எடுத்துக்கூறி, ஞான உண்மையை அல்லது தேவபடிப்பினையை விளக்க ஒருவர் எடுத்துக் கூறுவதை உவமையினால் உரைப்பது என்று கூறலாம். வேதாகமத்தில் வரும் உவமைகளை நோக்கினால் இவற்றின் வாயிலாக இயேசு

அருட்திரு R. S. லோப்பு அடிகள்.

ஆழ்ந்த ஞான உண்மைகளை, சாதாரண பாமர மக்களுக்கு சுலபமாக விளக்கிக் காட்டுகிறதைக் காணலாம். எனினும், சிலர், இந்த உண்மைகளை விளங்க மனமில்லாதவர்களாக இருக்கிறார்கள். அந்நாட்களில், பலஸ்தீனா நாட்டு மக்களுக்கு இயேசு கூறிய உவமைகள் இன்றும் என்றும், எந்நாட்டு மக்களுக்கும், எக்காலத்திலும், பிரயோசனப் படக்கூடியனவாக அமைந்திருக்கின்றன.

இறையரசைப் பற்றிய உவமைகளை, கருத்துக்கேற்றவாறு பிரித்து, தொகுத்துக் காட்டலாம். இவற்றை ஐந்து தலையங்கத்தில் பிரிக்கலாம்:—

a) ***உலக சரித்திரத்தில், இறையரசின் ஆரம்பம், ஒரு புதுத் திருப்பமாக அமைகின்றது:***— கிறிஸ்துவுடன் சரித்திரத்தில் புதியதொரு கட்டம் ஆரம்பமாகிவிட்டது. பழையன புதியனவற்றிற்கு இடம்கொடுக்கவேண்டும். பழையதுடன் புதியதை ஒன்றுசேர்க்க முடியாது.

b) ***இறை அரசு ஏற்படுத்தப்பட்டதின் விளைவு:***— யூத மக்கள், இறையரசை ஏற்றுக்கொள்ளாமல் போவதையும், யூதரல்லாதோர் கடவுளின் இராட்சியத்துள் பிரவேசிப்பதையும் காணலாம். இதற்கு இசையாஸ் தீர்க்கதரிசியின் வார்த்தைகள் சாட்சி பகருகின்றன (இசை 6, 10)

c) ***இறை அரசின் அங்கத்தவர்களுக்கு, சலுகைகளும் விசேசமாக, கடமைகளும் உண்டு:***— ஒவ்வொருவரும் இறை அரசைப்பற்றி, விளிப்பாக, நிதானமும், கவனமும், உள்ளவர்களாக இருக்கவேண்டும். கடவுள்மட்டில், பிறர்மட்டில், கடமையைச் செய்வதுடன், தாழ்ச்சியுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

d) ***காலத்தோடும் நேரத்தோடும், படிப்படியாக இறை அரசு வளர்ந்து கொண்டேயிருக்கும்:***— மனித சரித்திரத்தில், கிறிஸ்துவின் நற்செய்தியானது மாபெரும் மாற்றத்தைக் கொண்டுவரும். மறையுடலில், நல்லதும் கெட்டதும் கலந்து வளரும்.

e) ***கிறிஸ்துவின் இரண்டாம் வருகையுடன், அதாவது சரித்திர முடிவில், இறை அரசின் வளர்ச்சியும் முற்றுப் பெறும்:***— வாழ்க்கையின் கடைசி நிமிடத்தில், கிறிஸ்து மீண்டும் வருவார். திடீரென தீர்ப்பு நடைபெறும். வாழ்க்

[13ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சமூகத் தொடர்புக் கருவிகள் பற்றிய கருத்தரங்கு மகாநாடு

"திரு"

தனி மனிதர்களை மட்டுமன்றி, மக்கள் கூட்டங்களையும், மனித குலம் முழுவதையும் இயல்பாக அடைந்து இயக்கவல்ல கருவிகளை இன்று தொழில் நுட்பத்துறையில் கண்டு பிடித்துள்ளனர். அவைகளிலே முக்கிய இடம் பெறுகின்றவை: அச்சு வெளியீடு, திரைப் படம், வானொலி, தொலைகாட்சி போன்ற கருவிகள். இந்தக் கருவிகளைத் தகுந்த முறை யில் பயன் படுத்தினால் மனித இனம் மிகுந்த நன்மைகளை அடைய முடியுமென்பதைத் திருச்சபை உணர்ந்துள்ளது. ஏனெனில் இவைகள் மனிதனுக்கு ஓய்வு அளித்து உள்ளத்தைப் பண்படுத்தவும், இறை அரசைப் பரப்பி, அதை நிலைநிறுத்தவும் பெரிதும் உதவுகின்றன. இவைகளை முறைகெட்ட விதத்தில் பயன்படுத்துவதால் மனித சமூகத்திற்கு அடிக்கடி ஏற்படும் தீங்குகள் அநேகம். இவைகளை மனதிற்கொண்டு ஒழுங்கு செய்யப்பட்டதுதான் சென்ற தை மாதம் 4—10ம் திகதிவரை கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கு மகா நாடு.

இம் மகாநாடு அகில இலங்கை மறைக் கல்வி நிலைய அதிபரான வண. டொன் சில்வஸ்ரர் அடிகளின் முயற்சியினாலும், மேற்கு ஜேர்மனியிலுள்ள ஆகன் நகர மறை பரப்புப் பணி நிலையத்தின் உதவியுடனும் முதன் முறையாக எமது இலங்கையில் ஒழுங்கு செய்யப்பட்டது.

இம் மகாநாட்டின் வெற்றிக்கு தங்கள் அனுபவத்தாலும், அறிவினாலும் பெரிதும் உதவியவர்கள்: உலகப்புகழ் பெற்ற ஜேர்மனி தேச கேள்வி—காட்சிக் கருவிகளின் மறைச் சேவை அதிபர் வண. எட்மன்ட் பெக்கர் அடிகள், சுவிட்சலாந்து 'சோனோலுக்ஸ்' அதிபர் வண. ஒத்மர் றவுசர், ஒல்லாந்து சினிமா தாபனத்தின் அதிபர் டாக்டர் யோண் ஹெஸ், தமிழ்நாட்டு மறைக் கல்வி நடுநிலையத்தின் கேள்வி—காட்சிப் பகுதியின் அதிபர் வண. மைக்கல ராஜ், அவரது உதவியாளர் திரு. மைக்கல் யோண், மணிலா நாட்டு மறைக் கல்விக் கல்லூரியின் கேள்வி—காட்சிப் பகுதியின் அதிபர் வண, றூபட் பிறடரிக், இலங்கைத் திரைப்பட இயக்குநர்களில் மிகவும் புகழ்பெற்ற திரு. லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸ் ஆகியோர் இம் மகாநாட்டில் மற்றைய கிறிஸ்த சபைகளின் பிரதிநிதிகளும், மேற்றிராசனங்களின் பிரதிநிதிகளும், இத்துறையில் ஆர்வமுள்ளவர்களுமாக 200 பேருக்கு மேற்பட்டோர் சமூகமளித்து ஒரு வாரமாக நடைபெற்ற சொற்பொழிவுகளிலும், கலந்துரையாடல்களிலும்—நடைமுறைக் காட்சிகளிலும் சலிப்படையாது பங்கு பற்றினர்.

இத்துணை முக்கியத்துவம் வாய்ந்த சமூகத் தொடர்புக் கருவிகளை எவ்வாறு நம் நாட்டில் மறைக்கல்விக்கு பயன்படுத்த முடியுமென்பது இம் மகா நாட்டில் ஆராய்ந்த பிரச்சனைகளில் ஒன்று. எடுக்கப்பட்ட முடிவுகளில் சில: ஜேர்மனி நாட்டு ஆயர்களின் உதவியுடன் சுவிட்சலாந்து நாட்டு ''சோனோலுக்ஸ்'' நிலைய அதிபர் வண. ஒத்மர் றவுசர் அடிகளின் அயராத உழைப்பினாலும் எம் நாட்டுச் சூழ்நிலையில் எடுக்கப்பட்ட ''புத்துயிர்'' முறைக்கு தக்க ஆதரவை இலங்கை பூராகவும் அளிப்பதெனவும், பங்குகளில் இளைஞர்களுக்கென ''சினிமா கலந்துரையாடல் இயக்கங்களை'' ஏற்படுத்தல், முதலியன.

மகா நாட்டில் கலந்துகொண்டவர்கள்: ''கிறிஸ்தவக் கல்விக்கும் ஆன்ம ஈடேற்ற அலுவலுக்கும் தேவையானவையும், பயனுள்ளவையுமான எல்லாவிதக் கருவிகளையும் பயன்படுத்தவும், இந்தக் கருவிகளின் உதவியால் தாங்களும் மனித இனம் முழுவதும் மீட்பும் நிறைவும் பெறுமாறு விசுவாசிகளைப் பயிற்றுவித்து, கண்காணிப்பது திருமேய்பர்களின் கடமை'' என்பதையும்—"இறைவனின் திட்டத்திற்கும், மக்களின் உயர்ந்த நம்பிக்கைக்கும் இக் கருவிகள் முற்றாக ஒத்திருக்கும் வகையில் இவைகளுக்கு மனித, கிறிஸ்தவ உணர்வுகளால் புத்துயிரூட்ட வேண்டியது சிறப்பாக பொதுநிலையினரின் கடமை'' என்பதையும் தெளிவாகத் தங்கள் மனதில் பதித்துக்கொண்டனர். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உண்மை நட்பு"

மேரி ஜெயமணி
இரத்தினபுரி.

அன்று, கல்லூரியின் ஒன்பதாம் வகுப்புச் சரித்திரத்திலே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய பொன்னாள். அந்த நன்னாளில்தான், தந்தையின் இடமாற்றம் காரணமாக புதிய கல்லூரியின் ஒன்பதாம் வகுப்பிலே ஞானி காலடி எடுத்து வைத்தான். அன்று அவன் வைத்த காலடி, வகுப்பிற்கு மாத்திரமல்ல அவ் வகுப்பு மாணவர்கள் பலரின் முன்னேற்றத்திற்கும், புகழ்ச்சிக்கும் காரணமாக அமைந்தது. அன்று வரை வகுப்பிலே முதல் இடத்தைப் பெற்றுக்கொண்டதுடன், பலபேரின் பாராட்டுதல்களையும் பெற்று வந்த ரவிக்கு ஞானியின் வரவு பேரிடியாக அமைந்திருந்தது. தன்னுடைய பாடசாலை வாழ்க்கையில் இப்படியொரு போட்டி ஏற்படுமென்று ரவி எதிர்பார்த்திருக்கவில்லை. இதனால், ஞானியின் மேல் ரவிக்கு பொறாமை ஏற்படத் தொடங்கியது. இத்தகைய பொறாமை அவனுடைய வாழ்வில் பல கோணங்களில் செயலாற்றத் தொடங்கியது. ஞானியின் மதிப்பையும், புகழையும் தன் பக்கம் திருப்ப ரவி வழிதேடிக் கொண்டிருந்தான்.

இரண்டாம் பருவப் பரீட்சை முடிவு தினம். பாடசாலை விடுமுறை கொடுப்பதற்கு முந்திய தினம். மாணவர்களில் பலர் ஆரவாரம் செய்து ஞானியின் திறமையைப் புகழ்ந்து கொண்டிருந்தனர். அதே நேரத்தில் ரவி அவனுக்குக் கிடைக்கின்ற மதிப்பைக் கண்டு பொறாமைத்தீயில் வெந்துகொண்டிருந்தான். காரணம், 2ம் பருவப் பரீட்சையிலே ஞானி முதலாம் இடத்தைப் பெற்றிருந்தான். நான் பெற்று வந்த இடத்தைத் தட்டிக் கொண்டு விட்டானே ஞானி என்று அவன் மனம் குறு குறுத்தது. அறிவு வளர்ச்சியிலே சென்று அவனைத் தோற்கடிக்க விரும்பாத ரவியின் கள்ள மனம் குறுக்கு வழியில் அறிவு வளர்ப்பது எப்படி, பாராட்டுதல்கள் பெறுவது எப்படி என்று ஆராயத் தொடங்கியது. முடிவில் அவனைப் பழிவாங்குவது என்று தீர்மானித்துக் கொண்டான் ரவி. பாடசாலை விடுமுறையில் குறுக்கு வழியைப்பற்றி சிந்திப்பதற்கே ஒரு நேரத்தை ஒதுக்கி வந்தான். அவனுடைய குறிக்கோள் எப்படியாவது ஞானியை வகுப்பிலே தோற்கடிக்க வேண்டும் என்பதுதான்.

இரண்டாம் பருவ விடுமுறைத் தினங்கள் கழிந்தன. பாடசாலை ஆரம்பமாகியது. மாணவர்கள் எல்லோரும் தங்கள் களிப்பு மிகுந்த விடுமுறை தினத்தைப் பற்றி ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டிருந்தனர். ரவியும் வழக்கம்போல் மாணவர்களோடு சேர்ந்து கொண்டான். ஆனால் அவனுடைய உள்ளத்திலே மாத்திரம் குறுக்கு வழியில் முதல் இடம் பெறுவது என்பதைப்பற்றிய சிந்தனையே இளையோடிக் கொண்டிருந்தது. இப்படியாக நாட்கள் பல கடந்தன. மூன்றாம் தவணைப் பரீட்சையும் ஆரம்பமாகத் தொடங்கியது. ரவி ஞானியை பழிக்குப்பழி வாங்கத் திட்டம் தீட்டிக்கொண்டான். தான் ஆற்றப் போகும் செயல் வெற்றிகரமாக நடைபெறுவதற்குத்தேவையான ஆயத்தங்களைச் செய்து கொள்வதில் முனைந்தான். இரவில் பல மணி நேரம் கண்விழித்து தனது பாடங்களுக்குரிய குறிப்புகளையெல்லாம் அழகாக எழுதிக்கொண்டான். வழக்கத்திலே தாறுமாறாக எழுதுவதில் கைதேர்ந்திருந்த ரவி இக் குறிப்புகளை மாத்திரம் அழகாக எழுதிவைத்துக் கொண்டான்.

மூன்றாம் தவணைப் பரீட்சைத் தினத்தின் கடைசி நாள் சரித்திரப் பாடம் நடைபெற ஆயத்தமாகிக் கொண்டிருந்தது. மாணவர்கள் அனைவரும் தமது பாடக் குறிப்புகள் பற்றிய வினா விடைகளில் பேச்சை நடாத்திக் கொண்டிருந்தனர். ஞானியும் இவர்களுடன் சேர்ந்து கொண்டான். ஆனால், ரவி .... ....? அவனை இன்னும் காணவில்லை. ரவியின் வருகையின் தாமதத்திற்கான காரணத்தைப் பற்றி யர்ரும் கேட்கவில்லை. ஏனென்றால் அனைவரும் பாடத்திலேயே கண்ணும் கருத்துமாயிருந்தார்கள். பரீட்சை ஆரம்பத்திற்கு அறிகுறியாக பாடசாலை மணி ஒலிக்கத் தொடங்கியது. அதைத் தொடர்ந்து மாணவர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்

[11ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## உண்மை நட்பு...

[11ம் பக்கத் தொடர்ச்சி]

தனர். ஞானியும் தனது இடத்தில் அமர்ந்து கொண்டான். ஆனல், ரவியின் கதிரை காலி யாக இருந்தது. இன்னும் ரவி பரீட்சைக்கு வந்து சேரவில்லை. பரிசோதகர்கள் தங்கள் வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டனர். அப் பொழுதுதான் ரவி இளைக்க இளைக்க ஓடி வந்தான். பாய்ந்து வந்து தனது இருக்கை யில் அமர்ந்து கொண்டான். பரிசோதகர் கள் இங்குமங்குமாக அலைந்து திரிந்ததினல் ரவியின் வருகையை குறிப்பாக கவனிக்க வில்லை. மாணவர்கள் பரீட்சை எழுத ஆயத்த மானுர்கள். ரவியின் பல நாள் திட்டம் செயல் படத் தொடங்கியது.

ரவி தன் பாக்கெட்டில் மறைத்து வைத் திருந்த பாடக் குறிப்புகளை எடுத்து வைத்து அதைப் பார்த்து எழுதுவதில் முனைந்தான். தன்னை யாராவது கவனிக்கிருர்களா, குறிப் பாக ஞானி தன்னைக் கவனிக்கிருனு என்று அவனுடைய குள்ள மனம் துருவி ஆராய்ந் தது. நல்ல முறையில் பாடக் குறிப்புகளை வினவிற்கு ஏற்றபடி பார்த்து எழுதி முடித் ததும், தான் முன்கூட்டியே முடிவுகட்டி யிருந்தபடி குறிப்புகளை குறிப்பிட்ட இலக்கை நோக்கி வீசியெறிந்தான். குறிப்புகள் ரவி குறிப்பிட்ட இலக்கிலே சென்று விழுந்தன. யாரும் அதைக் கவனிக்கவில்லை. ரவியின் உள்ளம் மகிழ்ச்சியால் நிரம்பி வழிந்தது. கார ணம், தான் தப்பிவிட்டான் என்ற எண்ணம் இல்லை. ஆனல், தான் வீசிய குறிப்புகள் ஞானியின் இருக்கைக்கு கீழே போய் விழுந் தமையே. பரீட்சை முடிய ஐந்து நிமிடங் கள் மாத்திரம் இருந்தன. பரிசோதகர்கள் தங்கள் கடமையின் எல்லையை அண்மித்து விரைவாக பரீட்சை விடைப் பத்திரங்களை சேகரிப்பதில் ஈடுபட்டனர். வரிசையாக பரி சோதகர் ஒவ்வொரு மாணவனிடமும் வந்து பத்திரங்களை பரிசோதித்து வாங்கிக் கொண் டார். ஞானியின் அருகே வந்த பரிசோதகர் அவன் இருக்கையின் கீழே இருந்த பத்திரங் களையும் கவனித்து, அதை எடுத்து விரித் தார். அங்கு சரித்திரப் பாடக் குறிப்புகள் அத்தனையும் இருந்தன. பரிசோதகர் பல கோணங்களில் சிந்தித்தார். முடிவு....? ஞானி யின் விடைப் பத்திரத்தில் ஒரு அழகான முட்டை வடிவம் காட்சியளித்தது. ஞானி துக்கம் தாள முடியாமல் அழத் தொடங் கினுன். தனது பத்திரங்களை ஒப்படைத்த ரவி வெற்றிக்களிப்பிலே வீரநடை போட்டு வீடு நோக்கி நடந்தான், இம்முறை ஞானிக்கு சரித்திரப் பாடத்தில் மாத்திரமல்ல, முழுப் பாடங்களிலும் அந்த நிகழ்ச்சி எதிரொலிக் கும் என்பதை நினைக்கும் போது ரவிக்கு எங்கோ செல்வதைப் போலிருந்தது. ஆனந் தக் கடலில் மிதந்தான் ரவி. அப்போது விரைந்து வந்த காரை அவன் கவனிக்கவில்லை ஆனந்தக் களிப்பு அவன் கண்களை மறைத் தது. முடிவு....? பயங்கரம்....? ''டமார்''.... என்ற சப்தம். பரிதாபம்.! ரவி இரத்த வெள்ளத்தில் மிதந்தான். தன்னையே நினைத் துப் பார்க்கமுடியாத நிலை அவனுக்கு.

சுய நினைவற்றிருந்த ரவி கண் விழித்த போது.... அவனுக்கு ஆச்சரியமும், வேதனை யுமாக இருந்தது. தான் வைத்தியசாலையில் இருப்பதை உணர்ந்து கொண்டான். தன்னிட மிருந்து ஏதோ ஒரு பொருள் தன்னைவிட்டுப் போய்விட்டதைப் போலிருந்தது அவனுக்கு. அதை நினைவு படுத்த முயன்று கொண்டிருந் தான் அவன். அவனுடைய இச் செய்கைகளைக் கண்ணுற்ற அவன் தந்தை அவனுக்கு ஏற் பட்ட விபத்தைப் பற்றி கூறினுர். தன்னைச் சுற்றிலும் தனது சக மாணவர்கள் இருப் பதைக் கண்ட ரவி, ஞானியின் முகத்தை மாத்திரம் காணுததைக் கண்டு அவனைத் தேடினுன். இதையறிந்துகொண்ட மாணவர் கள் ஞானிக்கு ஏற்பட்ட முடிவைக் கூறினர். விபத்திலே ரவி அதிக இரத்தத்தை இழந்த தினல் அவனுக்கு உயிர் கொடுக்க ஞானி உதவியதாகக் கூறினர். இந்த இரத்த தானத் திலே ஏற்பட்ட தவறு காரணமாக ஞானி அடுத்த படுக்கையிலே ஓய்வு எடுப்பதையும் கூறினுர்கள்.

அப்போதுதான் ரவியின் தீய உள்ளம் திருந்திய உள்ளமாக மாறியது. ஞானியின் உண்மை நட்பை அறிந்து கொண்டது. பாட சாலையில் அறிவு வளர்ச்சியிலே போட்டி ஏற் படலாமே தவிர, பொருமை ஏற்படக்கூடாது, என்பதையும் அவன் உணர்ந்து கொண்டான். தான் புரிந்த பிழையை நினைத்து வருந்தினுன். அவனையறியாமலே அவனுடைய கண்கள் குளமாகின. கால்கள் ஞானியிடம் செல்லத் துடித்தன. கண்களிலிருந்து கண்ணீர் வழிந் தோடியது. அது.... ஆனந்தக் கண்ணீரா....? அல்லது துன்பக் கண்ணீரா........? அல்லது வெறுங் கண்ணீரா என்பது, ரவி ஒருவனுக் குத்தான் தெரியும்........

(முற்றும்) ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# "அடிமைப் பெண்"

—எல். அலோசியஸ்—
ஊர்காவற்றுறை.

சினிமாத்திரையில் ஓடிக்கொண்டிருக்கும் படவிமரிசனம் அல்ல. சிந்திக்க ஒரு கதை அர்ப்பணிக்கின்றேன்.

அந்தி மயங்கும் வேளை. இளந் தென்றல் ஜில் என அடித்துக் கொண்டிருந்தது. அன்னை லூர்து மரியின் கெபியின் முன்னே ஒரு சிறுமி முழந்தாள் படியிட்டு தலைகுனிந்து செபித்துக்கொண்டிருந்தாள். பன்னிரண்டு வயது மதிக்கத்தக்க அவளது முகத்தில் சோகக் களை தட்டியிருந்தது. பார்ப்பதற்கு பன்னீராயிரம் ஆண்டுகள் அனுபவக்காரிபோல் தோற்றமளித்தாள்.

''யான் பிறந்தமுதல் இது காலமும் துன்பத்தையே அனுபவித்துக் கொண்டு வருகிறேன். ஐயா வீட்டில் இருந்தால் எனக்கு ஆறுதலாக இருப்பார். அவரையும் நீங்கள் அழைத்துவிட்டீர்கள். வீட்டில் அம்மா என்னைப் படுத்தும் பாடு கொஞ்சமா? எப்படி வேலை செய்தாலும் அது சொத்தை, இது சொள்ளை என்று திட்டுகிறாள். மறுமொழி கூறினாலோ, கொழுப்பு மிஞ்சிவிட்டது, வாயாடி, மூளி, காளி, பேய், பிசாசு என்று திட்டுகிறார்கள். நான் ஒரு அனாதையாம். தவித்தோர்க்கு நாயகியே நீதானம்மா என்னைக் காப்பாற்ற வேண்டும்'' என்று புலம்பிக் கொண்டிருந்தாள் அச்சிறுமி ராஜி.

ஃ ஃ ஃ

மரியதாஸ்பிள்ளை ஒரு செல்வந்தர். பணம் படைத்தவர். அடக்கமே உருவானவர். இப்படிப்பட்ட உத்தமருக்கு மனைவியாக வாய்த்தவள்தான் மகரதம் என்ற மண்டோதரி. இவள் அகங்காரம் கொண்டவள். செல்வச் செருக்குற்ற சீமாட்டி. பொய் பேசுவதில் பூரணம். மெய் பேசுவதில் பூஜ்யம். இவளுடன் தான் மரியதாஸ்பிள்ளை இல்லறம் நடாத்தி வந்தார். அவள் கீறின கோட்டை தாண்ட மாட்டார். அவருக்கு அவ்வீட்டில் சுயேச்சை அதிகாரம் கிடையாது. கைச் செலவுக்குக் காசானாலும் மனைவியிடம்தான் கேட்க வேண்டும். இவர்கள் பத்து வருட காலம் இல்லறம் நடாத்தியும் பிள்ளைப் பாக்கியம் கிட்டவில்லை.

இந்நிலையில்தான் ராஜியை எடுத்து வளர்த்தனர். ராஜியும் மாரிகாலத்து வாழைக் குருத்துபோல நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து 12 வயதை அடைந்தாள். மரியதாஸ்பிள்ளையையும், மகரதத்தையும் அப்பா, அம்மா என்றே அழைத்து வந்தாள். ராஜியின் வாழ்விலகூட விதிக்கு வாய் வைக்காமல் இருக்க முடியவில்லை. மரியதாஸ்பிள்ளை ஒரு விபத்தில் மரணமானார். ''சனியன், நாசமாப் போகிற மூதேவி வீட்டுக்கு வந்தவுடன் உயிரிலும் கை வைத்து விட்டாள்'' என்றெல்லாம் திட்டினாள். செக்கிலிட்ட எள்ளைப்போல் குழந்தையை ஆட்டிப் படைத்தாள் மகரதம். காலை 7 மணியில் இருந்து மாலை 7 மணி வரைக்கும் ராஜிக்கு வேலை. அப்படி இருந்தும் நாள் பூசை தவற மாட்டாள். நேரம் உள்ளபோதெல்லாம் கெபிக்குச்சென்று தன் கஷ்டத்தை மரியன்னையிடம் சொல்லியழுவாள் ராஜி மகா பொறுமைசாலி. ''என்னைப் பலப்படுத்துகிறவர் எவரோ அவராலே எல்லாவற்றையும் செய்ய எனக்குச் சக்தியுண்டு'' என்ற வேத வாக்கின் ஞாபகமே அவளை உற்சாகப்படுத்திக் கொண்டு வந்தது.

நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகி, மாதங்கள் வருடங்களாக மலர்ந்தன. மகரதமும் கிழவியானாள். கிழவி மகரதமும் நோய்வாய்ப்பட்டுப் பாயும் படுக்கையுமானாள். முன் எவ்வளவு கொடுமைப் புலியாய் இருந்தாளோ இப்பொழுது அவ்வளவுக்கவ்வளவு சாதுவான பசுவாக மாறி விட்டாள். ராஜி மரியாய்க்கு நன்றி கூறினாள். மனம் சலியாது கடைசிப் பணிகளைச் செய்து வந்தாள். கிழவிக்குக் கடைசிக்காலம் கிட்டியது. குருவை அழைத்தாள் ராஜி. குருவைக் கண்டதும் மகரதம் தேம்பித் தேம்பி அழத் தொடங்கினாள். தனது கொடுமைகளுக்காக ராஜியிடமும், திவ்விய யேசுவிடமும் மன்னிப்புக் கோரினாள். கடைசித் தேவதிரவிய அனுமானங்களை செவ்வனே செய்து முடித்தாள். ராஜியின் மடியில் பாக்கியமான மரணமடைந்தாள்.

[13ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**திருகோணமலை — மட்டக்களப்பு மறைமாவட்ட ஐக்கிய சங்கத்தின் 1971ம் ஆண்டிற்குரிய செயல்திட்டத் தீர்மானங்கள்.**

சென்ற வருடம் கார்த்திகைத் திங்களில் மட்டக்களப்பில் நடைபெற்ற தி.ம.ம.ஐ. சங்கத்தின் வருடாந்த மகா நாட்டின்போது **''வளர்ந்தோர்க்கு மறைக்கல்வி''** சம்பந்தமாக பேச்சுக்களும், கலந்துரையாடல்களும் இடம்பெற்றன. அவற்றின் இறுதியில் பல செயல்முறைச் சிபாரிசுகள் பிராந்திய குழுக்களால் சமர்ப்பிக்கப்பட்டன. இவற்றைத் தொகுத்து ஆண்டிற்குரிய ஒரு செயல் திட்டத்தை உருவாக்கும் பொறுப்பு ஆளுங் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆளுங்குழு இவ் ஆண்டிற்குரிய செயல்திட்டத்தை அறியத்தருன்றது.

1. **பிள்ளைகளின் மறைக்கல்வியில் பெற்றோரின் பங்கு.**

பெற்றோர்க்கு மறைக்கல்வி என்ற பொருள் சம்பந்தமாகக் கலந்துரையாடல் நிகழ்ச்சிகளை பங்குச் சபைகள் நடத்தி அறிக்கைகள் சமர்ப்பிக்க வேண்டும்.

2. **திருமணத்திற்கு ஆயத்தம் செய்தல்.**

திருமணப்பருவம் எய்தும் சகல ஆண், பெண் பிள்ளைகளை ஒன்று சேர்த்து, ஆண்களுக்கும் பெண்களுக்கும் வெவ்வேறாகத் திருமனத்தின் பெருமை, திருமணமாகியபின் தோன்றக்கூடிய பிரச்சனைகள், திருவருட்சாதனத்திற்கும் திருச்சபைக்குமுள்ள தொடர்புகள், ஆகியவை பற்றி விளக்கிக் கூற ஒவ்வொரு பங்குச்சபையும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. **வளர்ந்தோரின் மறை அறிவை வளர்த்தல்.**

ஒவ்வொரு பங்கிலும் வளர்ந்தோர்க்கான வேதாகம ஆராய்ச்சி மன்றங்கள் அமைக்கும்படியாக வற்புறுத்துவதுடன், பங்குகள் தோறும் குடிசைக் கட்டங்கள் நடாத்தி வளர்ந்தோர்க்கு மறை அறிவை ஊட்ட வேண்டிய ஆக்கப் பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

4. **இளைஞருக்கு மறைக்கல்வி.**

இளைஞரின் மறையறிவை வளர்ப்பதற்கு மன்றங்கள் ஒவ்வொரு பங்கிலும் அமைக்கப்படல் வேண்டும். அன்றேல், பங்குகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இளைஞர் மன்றங்கள் மூலம் மறையறிவைப் பரப்புவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

A. W. அரியநாயகம்
செயலாளர்.

## மாணவர் மன்றம்...

[8ம் பக்கத் தொடர்ச்சி]

கையின் வெற்றி, தோல்வி நித்தியத்துக்கும் தீர்மானிக்கப்படும்.

**விதைப்பவன் உவமை:**

(லூக். 8, 5, 15)
(மத். 13, 1, 9)
(மாற். 4, 1, 9)

இந்த உவமையின் மறைபொருளை, இயேசு, தம் அப்போஸ்தலர்களின் வேண்டுகோளுக்கிணங்கி, எடுத்துக் கூறுகின்றார். பல தரப்பட்ட நிலத்தில் விழுந்த விதைகள், பல விதமான நிலைமைக்கு உள்ளாகின்றன. அதே போல, கடவுளின் வார்த்தையைக் கேட்கும் ஒவ்வொருவருக்கும், ஒரேவிதமான விளைவுகளும், பயன்களும் ஏற்படுவதில்லை. கடவுளின் வார்த்தை, பற்பல விதத்தில் கொடுக்கப்படுகின்றது. அதன் நல்ல பயன், பெறுகிறவரைப் பொறுத்திருக்கின்றது.

ஞான வாழ்க்கைக்கு, ஞான வாசிவை அவசியம். ஒவ்வொரு கத்தோலிக்கனும், தினமும், வேதாகமத்திலிருந்து, சிறு பகுதியாகுதல் வாசிக்கவேண்டும். ஞானப் புத்தகங்கள் வாசித்தல் நல்லது. ஞான அறிவுரைகள், பிரசங்கங்கள் போன்றவை நல்ல மனதுடன், கவனமாகக் கேட்டு, நல்ல பயனடைய வேண்டும். கடவுளின் வார்த்தை ஆக்கும் சக்தி வாய்ந்தது. அதை நம் இருதயத்தில் வாங்கி, தக்க பயனை அடையச் செய்வது, முற்றிலும் நம்மில் தங்கியுள்ளது.★

## அடிமைப் பெண்...

[12ம் பக்கத் தொடர்ச்சி]

அடிமைப் பெண் சுதந்திரப் பறவையானாள். எனினும் மரியாயினதும், திவ்விய யேசுவினதும் சிநேகத்திற்கு கடைசி பரியந்தம் பிரமாணிக்கமாய் இருக்க விரும்பி கன்னியர் மடமொன்றில் புகுந்தாள்.

இங்கு வெற்றி பெற்றது எது? மகரதத்தின் கொடுமையா? அல்லது ராஜியின் பொறுமையா? ஆகையால் ''இவர்கள் செய்கிறதை இன்னதென்று அறியாமல் செய்கிறார்கள். இவர்களை மன்னியும்'' என்று கூறிய யேசுவைப்போல் நாமும் நமக்கு தீமை செய்பவர்களை மன்னிப்போமாக.

**''ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பம் பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ்''** ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இளைஞர் இல்லம்

## இளைஞர் சிந்தனைக்கு

- பொ. இராமலிங்கம் -

இளைஞர்களே, சிந்தியுங்கள் !

இல் வாழ்வில் முதிர்வடைந்த பெரியோர், பெற்றோர் பெரும்பாலார் இன்று வாழ்வில் தத்தளிக்கின்றனர். இதற்குப் பல காரணங்கள்: குடும்ப பாரம், வருமானம் இன்மை, பிள்ளைகள் ஒற்றுமை இன்மை, பரஸ்பர விளக்கம், அன்பு, உறவு இன்மை, இறைவன் ஆசி கிடையாமை எனப்பல. இவற்றுள் ஒன்றோ பலவோ சேர்ந்து பெற்றோர் தம்முள் பிரிவினையை உண்டாக்கி, ஒருவரை ஒருவர் பிரிந்துவாழ்வதைக் காண்கிறீர்கள்.

வளர்ந்தோர் நிலைமை இப்படியிருக்க, இளந்தம்பதிகட்கிடையே கூட, இத்துர்ப்பாக்கிய நிலை ஏற்படுவதை இன்று நீங்கள் காண்கிறீர்கள். இது ஏன் என நீங்கள் எப்போதாயினும் சிந்தித்ததுண்டா? இந்த அவல நிலைமை உங்கட்கும் வரக்கூடும் என்று எண்ணி, நீங்கள் பயப்படவில்லையா?

மிக முக்கிய காரணம் திருமண வாழ்வுக்கு உரிய போதிய ஆயத்தம் இல்லாமை தான்.

உங்கள் பருவம் மிக மகிழ்வுக்குரிய பருவம்; ஆனல் மிகவும் சிக்கலான பருவம். வளர்ந்தோர் என்னும் உயரிய படியில் கால் எடுத்து வைக்கும்போது, அதற்கேற்ப வாழ்ந்து, தயார் செய்து, சரியான முடிவு செய்து அடி எடுத்துவைக்க நீங்கள் ஆயத்தமா? இளமை கடந்ததும் இல்லறம் அல்லது துறவு. எதற்கு உங்களை ஆயத்தம் செய்கிறீர்கள்? நீங்கள் உதவி பெற எத்தனையோ வழிகளுண்டு. அவற்றை நாடிச் செல்லுங்கள். அதற்கு முன்பு இவற்றைச் சிந்தியுங்கள்.

### இல்வாழ்வு:

இல்வாழ்வுக்கு இன்றியமையாதது இணையில்லா அன்பு. இன்றைய சமூக நிலைமைகளில், உங்கள் பருவச் சார்புடன் இந்த அன்பு நிலை இருபாலார்க்குமிடையே உருவாகக்கூடும். அழகுமிகுந்த ஒரு ஆணை/பெண்ணைக் கண்டால், சற்றே பழகிவிட்டால், பற்றுவது உண்மை அன்புதானு? காதல்! இந்த அன்பு (காதல்) இறுதிவரை துணை நிற்குமா?

### காதல் தவிர்க்கமுடியாதது அல்ல:

மானுஷீகக் காதல், ஒரு அழகிய பொருளைக் கண்டவுடனேயே கொதித்தெழும் வெறும் தாகம் மட்டுமல்ல; நமது மனத்தின் தானுக இயங்கும் இயக்கமுமாகும். எனவே அந்த தாகத்தை மனவலிமையால்-திடசித்தத்தால் கட்டுப்படுத்த முடியும்.

ஒரு பெருஞ் செல்வனின் வீட்டில் வேலை செய்யும் ஏழை ஊழியன், அச் செல்வனின் அழகிய மகளைக் கண்டான். மனதில் அந்தத் தாகம் ஏற்படுகிறது. அவனல் அவளை அடையமுடியுமா, வாழ்வு நிறைவுறுமா? இல்லை என அவன் புத்தி நியாயங்களை எடுத்துக்காட்டுகிறது. உடனே அத் தாகம் அடங்கி விடுகிறது. விவாகமான ஆணில்/பெண்ணில் கூட அந்தக் காதல் ஏற்படுகிறதே; துறவு, நித்திய கன்னிமை வாழ்வை ஏற்றுக்கொண்டவர் மீது கூட காதல் ஏற்படுகிறதே. இவை எவ்வாறு தவிர்க்கப்படுகின்றன. நியாயம்: மனவலிமை. கலப்பு மணம் தீமையளிக்கக் கண்டும், ஒரு கத்தோலிக்கர் ஒரு பிறசமயி மேல் காதல் ஏற்படும் போது, தன் மனவலிமை நியாய, காரண காரிய ஆலோசனை மூலம் ஏன் அந்தக் காதலைத் தவிர்க்க முடியாது! நல்ல கத்தோலிக்க கொள்கை நோக்குடன் வாழும் ஒரு இளைஞன்/யுவதி, இந்நிலையை நிச்சயம் தவிர்க்க முடியும்.

### தயாரதுங்கள் :

திருமணம் புரிந்து, ஒரு புதிய இல்லம் அமைக்க தீர்மானித்துவிட்டீர்களா? இப்போதே இதற்கு நல்ல அத்திவாரமிடுங்கள். உங்கள் சிறந்த இந்த இளம் ஆண் / பெண்

[16ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அமலனை அடைவது யார்?

R. A. யோகரெட்ணம்
திருகோணமலை.

இன்று அவனியில் வாழும் ஒவ்வொரு கிறிஸ்தவ மகனும் அமலனின் பிள்ளையாக விளங்கும் இவ்வேளையில் எமது பிதாவின் இருப்பிடமாகிய மோட்ச இராட்சியத்துக்குப் போவது யார்? என்ற கேள்வி தென்னிந்தியாவில் ஒரு அரசியல் தலைவரும் கலைஞருமாகிய ஒருவரால் கேட்கப்பட்டது. ஆம் அவரின் கேள்வியை மையமாகக்கொண்டு எமது கத்தோலிக்க சமுதாயத்தைச் சற்று அலசி ஆராய்வது நன்றாகும். ஒருகாலத்தில் நமது ஆண்டவராகிய யேசுகிறிஸ்து தாமே கூறியுள்ளார். ''ஆண்டவரே, ஆண்டவரே என்று தினமும் கூப்பிடுபவர்கள் என் பிதாவின் இராட்சியம் போகமுடியாது. என் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுபவனே பிதாவின் இராச்சியம் போகமுடியும்,'' பிதாவின் சித்தம் என்றால் பிதாவினால் இவ்வுலகிற்கு அனுப்பப்பட்ட ஆண்டவராகிய கிறிஸ்துவின் போதனைகளைக் கடைப்பிடிப்பதேயாகும்.

எனவேதான் இந்த உலகில் திக்கற்றுத் திரியும் மனித சமுதாயம் நேர்வழியான தம்மைக்கண்டு தம் பிதாவை நாடவேண்டும். இழிவைத் தேடிய மனிதன் உயர்வைப் பெறவேண்டும் என்பதற்காக, அவர் ஆதவனைப்போல உதயமானார். இதுவே வானுறை பிதாவின் திட்டமாய் இருந்தது. இதோ நான் உமது சித்தத்தை நிறைவேற்றவே வருகிறேன். (எபி. 10-7). வானகத் தந்தையின் சித்தத்தை நிறைவேற்ற அவர் தமக்குரிய இடத்திற்கு வந்தும் அவருக்குரியவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. (அரு. 1-11). ஆனால், அவரோ அவர்கள் மத்தியில் சேவையுடன் சேர்ந்த வாழ்வொன்றை வாழ்ந்து தியாகத்தின் உச்சியில் அன்பின் வடிவில் தம்மையே தந்தார். தமக்கென்று ஒன்றும் வைக்காது எம்மைத் தேடிக் காவல்கொண்டார். அவர் அன்று தாழ்ந்து தமக்கென்று ஒன்றும் வைக்காது வாழ்ந்ததால்தான் இன்று எம் சமுதாயம் வாழ முடிகின்றது.

கிறிஸ்துவே வானகத் தந்தையின் அடையாளமாகவும், அன்பின் எடுத்துக் காட்டாகவும் திகழ்ந்து தம் விலாவிலிருந்து திருச்சபை என்னும் சபையை உண்டாக்கி அதன் மூலம் விண்ணகத்தந்தையின் சித்தங்களை கிறிஸ்தவராகிய நமக்குப் போதித்து ஒவ்வொரு கத்தோலிக்க மகனும் எந்த வகையில், எந்த நோக்குடன் வாழவேண்டும் என்று எமக்குக் கற்பிக்கிறார். நாமோ அவற்றை மீறிப் பாவத்தைச் செய்கின்றோம்.

இவ்வுலகில் பணம் படைத்த ஒருவன் பணத்தின் செருக்கால் கடவுளையே மறந்து, மக்களை அடிமைகளாக்கி எதை எதையோ செய்ய முயற்சிக்கிறான். பணத்தால் அவன் இவ்வுலகில் செய்யும் பாவங்களுக்காகப் பெரும் தான தர்மங்களைச் செய்து இவ்வுலகையே வசப்படுத்தினாலும், அவன் மனம் ஆண்டவரின் மேல் அன்பில்லாது போனால் என்ன பயன்? அது மட்டுமல்லாமல் கள்ள ஞானிகளைப்போல் தினமும் ஆலயம் சென்று செபமாலையுடன் பலரும் பார்க்கும்படி செபிப்பதும், பீடத்தின் முன் காணிக்கை செலுத்துவதும், முறையன்று. நம் ஆண்டவரே கூறியுள்ளார். ''பீடத்தின் முன் உன் காணிக்கையைச் செலுத்தும்போது நீ உன் சகோதரனோடு மனத்தாங்கல் என்று நினைவு கூர்வாயானால், காணிக்கையைப் பீடத்தண்டை வைத்துவிட்டு முதலில் உன் சகோதரனோடு உறவாடு. பின் உன் காணிக்கையைச் செலுத்துவாயாக.'' (மத். 21-24).

இவைகளின் மத்தியில்தான் தாயாகிய திருச்சபை எம்மை பல வழிகளிலும் பிதாவின் சித்தத்தின்படி நடக்க தூண்டுகின்றது. நாம் பாவத்தில் விழுந்து மென்மேலும் பிதாவுக்குத் துன்பம் கொடுக்காவண்ணம் கிறிஸ்து நமக்கு நற் போதனைகளைப் போதித்து, பிறர் அன்புடையவராகவும், கீழ்ப்படிவுள்ளவராகவும் நடந்து தம்மையே அர்ப்பணித்துக் காட்டியுள்ளார். கிறிஸ்து நமக்காகவே, அரசராயிருந்தும் ஆண்டியானார், பரிசுத்தராயிருந்தும் பாவியைப்போலானார், ஆண்டவராயிருந்தும் அடிமையானார். தம்மைத்தாமே தாழ்த்தி

[16ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அமலனை அடை...

[15ம் பக்கத் தொடர்ச்சி]

சிலுவை மரணமட்டும் கீழ்ப்படிதல் உள்ளவரானார். ''அவன் பித்தன்'' என்று உலகு கூறுமளவுக்கு அவர் தம்மைத்தாமே தாழ்த்தினார்.

விஞ்ஞான நாகரீகம் தலைவிரித்தாடும் இந்த உலகில், மதங்களில் மாற்றங்களை உண்டு பண்ண முனையும் இவ்வேளையில், இறை நம்பிக்கை உடையவர்களாகவும், குற்றங்களைக் கண்டு வருந்தி, அவைகளைத் திருத்தி பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுபவர்களாகவும் நாம் வாழவேண்டும். இவ்வாறு பிதாவின் சித்தம் நிறைவேற்றப்பட்டால் பிதாவின் இருப்பிடமாகிய மோட்ச இராட்சியம் அடைய முடியும்.

''திருந்தாத உருவங்கள் பிறந்தென்ன லாபம்? வருந்தாத உள்ளங்கள் இருந்தென்ன லாபம்? இருந்தாலும் மறைந்தாலும் பெயர் சொல்லவேண்டும். இவர்போல யாரென்று ஊர் சொல்ல வேண்டும்.''

இவைகளை மறந்து துயில் கொள்ளும் கிறிஸ்தவ சமுதாயத்தைத் தாயாகிய திருச்சபை தட்டி எழுப்பி, கிறிஸ்தவ கட்டளைகளை அனுசரித்து, கிறிஸ்துவின் போதனைகளைக் கடைப்பிடித்து, அதன் மூலம் மோட்ச இராட்சியம் அடையத்தூண்டுகிறது. ★

## இளைஞர் இல்லம்...

[14ம் பக்கத் தொடர்ச்சி]

பருவத்தில் நாளாந்த செபம், அடிக்கடி திருவிருந்து அருந்துதலைப் பழகுங்கள். இவை வழித்துணையாயிருக்க, நீங்கள் ஒருவரோடு ஒருவர் பழகும்போது, இறைவன் உங்கள் எதிர் வாழ்வை வளம்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் கௌரவமாகப் பழகுங்கள். இறைவனை மறந்து, உடல் உணர்வுகட்கு அடிமைகளாகி, தனித் தனிமை நாடி, தவறான வழியில் சென்றால் உங்கள் புதிய வாழ்வு மணல்மேல்தான் கட்டப்பட்டதாகும்.

உலகும், உடலும் தரும் பாவசந்தர்ப்பங்களைத் தவிர்க்குக; ஏனெனில் அபாயத்தை நாடுபவன், அதனாலேயே அழிவான்.

**நல்ல அத்திவாரம் :**

உங்கள் புதுவாழ்வு, சமய வாழ்வு, நன்நெறி, புனிதம், இறை அருள் என்பவற்றால் ஆக்கப்பட்ட அத்திவாரத்தில் ஆரம்பிக்கட்டும். அதுவே அழகிய பீடமாக, புனித வாழ்வின் புதுக்கோட்டையாக, சமூகத் தூணாக, சமாதானம், சந்தோஷத்தின் உறைவிடமாக, இறைவனின் இல்லமாக உங்கள் புதிய இல்லத்தை ஆக்க உதவும். ★


## மூன்று சிறந்த கத்தோலிக்க நூல்கள்

1. **புனிதர் பிரான்சிஸ் அசிசியார் : ரூ. 7–50**
   இலங்கை சாகித்திய மண்டலத்தின் முதற் பரிசுபெற்ற முதலாவது கத்தோலிக்க நூல். ஆசியாவில் வெளியான தரமான நூல்களில் ஒன்றென மதிக்கப்பெற்று ஐக்கிய அமெரிக்க காங்கிரஸ் நூல்நிலையப் பட்டியலில் 76-913962ம் இலக்கத்தின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட நூல்.
2. **கர்த்தரின் செபமும் கிறிஸ்தவ பூரணத்துவமும் : ரூ. 1–50**
   இலங்கையிலும், இந்தியாவிலும் மிகச் சிறந்த பாராட்டுக்களைப் பெற்றது.
3. **பதுவை அந்தோனியார் : ரூ. 2–25**
   சமீப வெளியீடு. நவீன ஆராய்ச்சியின் மலர்ச்சி.

மூன்று நூல்களையும் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க : **ரூ. 12–00**

முற்பணமாக ரூ. 5-00 அனுப்புவோருக்கு 3 நூல்களும் V.P.P. யில் அனுப்பிவைக்கப்படும்.

புத்தக வியாபாரிகட்குச் சலுகைகள்.

கிடைக்குமிடம் :–
J. ஜுலியஸ் இராசையா
6, சென் மேரிஸ் ஒழுங்கை,
ஊர்காவற்றுறை.


இப்பிரசுரம் மட்டக்களப்பு 18, மத்திய வீதியிலுள்ள கத்தோலிக்க அச்சகத்தில், மனேஜர் யோசேப் B. மறே S.S.J. அவர்களால் அச்சிடப்பட்டு, மகா வந். தியோகுப்பிள்ளை, துணை ஆயர், மட்டக்களப்பு. அவர்களால் 1–2–71ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media